**கொழும்பு பெரும்பாக நகர அபிவிருத்திச் செயற்திட்டம் - 2019**

---

கொழும்பு பெரும்பாக நகர அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் (ஐபீஆர்டி) இடையே கைச்சாத்திடப்பட்ட 2012 மே 18 ஆந் திகதிய 8145-எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 2 ஆம் பட்டோலையின் II (பீ.3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் நகர அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் கொழும்பு மாநகர சபை என்பன செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாகவும் உள்ளன. கொழும்பு நீர்வடிநில வடிகாண்களில் வெள்ளம் ஏற்படுவதனைக் குறைத்தல், கொழும்பு தலைநகர் பிரதேசத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளின் இயலுமையினை வலுப்படுத்தல், தெரிவுசெய்யப்பட்ட நிரூபிக்கப்பட்ட முதலீடுகள் ஊடாக உள்ளூர் உட்கட்டமைப்பு வசதிகளையும் சேவைகளையும் மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 42,031.74 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 321 மில்லியனானதுடன் அதில் ரூபா 27,890.22 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 213 மில்லியன் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2012 யூலை 10 இல் தொடங்கியிருந்ததுடன் 2017 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. பின்னர் செயற்திட்ட காலப்பகுதி 2021 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவ பதில்கள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட உப செயற்திட்டங்களிற்காக பெறப்பட்ட மானியங்கள் ரூபா 10,000,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டதன் காரணமாக உலக வங்கிக் கடன் கணக்கு மற்றும் உள்ளூர் முற்பண கணக்கு ஆகிய இரண்டு மீதிகளும் ரூபா 10,000,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | வெளிநாட்டுக் கடன் கணக்கு நிதிக்கூற்றுக்களில் ரூபா 10,000,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது.<br><br>நாட்குறிப்பு பதிவொன்றின் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்த தவறு ஒன்றின் காரணமாக இது ஏற்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டுக் குறைபாடுகள் சீர்செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | திறைசேரி விபரங்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரை பயன்படுத்தப்பட்ட ஜீஓஎஸ்எல் நிதிகள் ரூபா 1,625,309,323 தொகையாக காணப்பட்ட போதிலும் திறைசேரி நிதி பயன்பாட்டு கணக்கின் பிரகாரம் அத் தொகை ரூபா 1,613,000,000 ஆக காட்டப்பட்டிருந்ததால் பெறப்பட்ட ஜீஓஎஸ்எல் நிதிகள் ரூபா 12,309,823 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | பெறப்பட்ட ஜீஓஎஸ்எல் நிதிகள் நிதிக்கூற்றுக்களில் ரூபா 12,309,823 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | வருடாந்த நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யும் செயன்முறையில் தவறொன்று ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.<br>இது 2020 ஆம் ஆண்டில் இது சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | ஜீஓஎஸ்எல் இடமிருந்து பெறப்பட்ட நிதிகள் சரியாக இணக்கம் செய்யப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்ட கூறு 2 இன் கீழ் காட்டப்பட்ட நிர்மாண மதியுரை சேவை செலவினம் ரூபா 267,454,113 தொகையாக காணப்பட்ட போதிலும் அது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட விபரமான பட்டியலின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 259,966,508 ஆக காட்டப்பட்டிருந்ததால் ரூபா 7,487,605 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | மதியுரை சேவை செலவினங்கள் மற்றும் விபரமான பட்டியல் என்பன இணங்காமை | கூறுகளிற்குரிய பட்டியலில் செலவினம் சரியாக நாளது வரையாக்கப்பட்டிருந்த போதிலும் முறையாக நாளது வரையாக்கப்பட்டிருக்காததனால் தவறு ஏற்பட்டிருந்தது | விபரமான பட்டியல்கள் மற்றும் நிதிக்கூற்றுக்களிலுள்ள தொடர்புபட்ட மீதிகள இணக்கம் செய்யப்பட வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவ பதில்கள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | | |
| (i) | நி.பி. 757(2)(அ)(ஆ) | பொருள் மெய்மையாய்வின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது செயற்திட்டத்தின் பொருளிருப்பு கட்டப்பாட்டு முறைமையை பாதிக்கின்றதுடன் சொத்துக்களின் பாதுகாப்பிற்கு தாக்கம் செலுத்துகின்றது. | பரிந்துரைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் தொடர்ந்து அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | பொருள் மெய்மையாய்வின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் பொருளிருப்பு கட்டுப்பாட்டு முறைமை வலுப்படுத்தப்பட வேண்டும். |
| (ii) | நி.பி. 751 | • உண்மை நேர வெள்ளக் கட்டுப்பாட்டு (ஆர்ரீசீ) – உப செயற்திட்டத்தால் பொருளிருப்பு பதிவேடு | செயற்திட்டத்தின் பொருளிருப்பு கட்டுப்பாட்டு முறைமை முறையற்றிருந்ததுடன் | இந்நோக்கத்திற்காக உத்தியோகத்தரை நியமித்து அவரிற்கு இது தொடர்பாக தேவையான | அலுவலகத்தால் பெறப்பட்ட அனைத்து பொருட்களிற்கும் உரிய பொருளிருப்பு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | பேணப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களின் பாதுகாப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தும். | அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. | பதிவேடுகள் பேணப்பட வேண்டும். |
| | | • இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு மாற்றப்பட்டிருந்த நான்கு அலுமாரிகள் பொருளிருப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதிவேடுகளில் சரியாக பொருளிருப்பு உருப்படிகள் பதிவு செய்யப்பட்டிருக்காததால் இது சொத்துக் கட்டுப்பாடுகளை பாதிக்கும். | தற்போது குறித்த உருப்படிகள் பதிவேட்டில் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளன. | பொருளிருப்பு பதிவேடுகள் முறையாக நாளதுவரையாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பிரிவு | செத்சிறிபாய கட்டிடத்தின் 13 ஆம் மாடியில் கட்டம் - II இன் செயற்திட்ட அலுவலகத்திற்குரிய அலுவலக பாகப் பிரிவினைக்கான ஒப்பந்தம் 2018 ஆம் ஆண்டில் ரூபா 1,726,985 இற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் உரிய நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | இது ஒப்பந்த முகாமைத்துவ செயன்முறையிலிருந்து வேறுபடும். | கருத்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு பெறுகைக்கும் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் தேவைப்பாடுகளுடன் செயற்திட்டம் இணங்குதல் வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

## 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம்

| | உப செயற்திட்டக் கூறு | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | விளைவு | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் | | | | | |
| | | | பௌதீக | நிதி | | | | |
| (அ) | புதிய முகத்துவாரம் ரொறிங்ரன் சுரங்கத்தின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் | 86 | 40 | 38 | அக் குறிப்பிடத்தக்களவு தாமதங்கள் காரணமாக ஒட்டுமொத்த செயற்திட்டக் காலப்பகுதி 2021 திசெம்பர் வரை நீடிப்பு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் நிர்மாண வேலைகளின் அசௌகரியங்கள் பொது மக்களை பாதித்திருந்தன. பொதுமக்களால் கால அடிப்படையில் எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் அடைந்துகொள்ளப்பட முடியாதிருந்தன. அதே போல் செயற்பாடுகளின் எதிர்பார்க்கப்பட்ட கிரயம் மேலதிகமாக ஏற்படும். | (i) இது செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த நோக்கங்களை அடைந்து கொள்வதை பாதித்திருந்தது.<br>(ii) பொதுமக்களிற்கு வழங்கப்பட வேண்டிய எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் தாமதமடைவதுடன் செயற்திட்ட கிரயம் மேலதிகமாக ஏற்படும். | அதிகளவு பொருத்தமான ஒப்பந்ததாரரை செயற்திட்டம் தெரிவுசெய்ய வேண்டியதுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய நிர்மாண வேலைக்காக சிறந்த மதிப்பீடொன்று காணப்பட வேண்டும். அத்துடன் நிர்மாண வேலைகள் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு மதியுரையாளர்களிற்கு வழிகாட்டல் வழங்கப்பட வேண்டும். | கருத்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | கோட்டை றம்பாட்டில் உயிரியல் பல்வகைமை பூங்காவின் அபிவிருத்தி | 89 | 45 | 42 | | | | |
| (இ) | தலன்கம குளத்திற்கு அருகில் மதகுடனான வெள்ள கதவு நிர்மாணம் மற்றும் பௌத்தலோகா மாவத்தையில் மதகு நிர்மாணம் | 49 | 37 | 47 | | | | |
| (ஈ) | சென் செபஸ்ரியன் வடக்கு லொக் கதவுகள் மற்றும் பம்பி நிலையத்தின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் | 90 | 69 | 80 | | | | |
| (உ) | கொலன்னாவ கால்வாய் திசைதிருப்பல் திட்டம் கட்டம் - I | 75 | 53 | 57 | | | | |
| (ஊ) | அம்பத்தலே வெள்ள நீர் பம்பி நிலையத்தின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் | 84 | 73 | 25 | | | | |

## 3.2 செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதில் தாமதங்கள்

| | செயற்பாடுகள் | பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட திகதி | பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் கையேற்ற திகதி | தாமதமான வேலைகளின் எண்ணிக்கை | விளைவுகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| (அ) | தேவி பாலிகா வித்தியாலயத்தின் அருகிலுள்ள வடிகாண் | 2017 நவம்பர் | 2019 செப்தெம்பர் 03 | 21 | ஒட்டுமொத்த செயற்திட்ட பூர்த்தியாக்கல் காலப்பகுதி தாமதமடையும். அத்துடன் நிர்மாண வேலைகளிலுள்ள தாமதங்கள் வேலைகளின் கிரயங்கள் அதிகரிப்பதற்கு வழிவகுத்திருந்தது. | எதிர்மறை விளைவுகளை இழிவுபடுத்தி நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | நொறிஸ் கால்வாய்க்கான மேம்படுத்தல்கள் | 2019 ஆகஸ்ட் | 2020 செப்தெம்பர் வரையிலும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | 11 | | | |
| (இ) | மதிவெல கிழக்கு குளத்திற்கான மேம்படுத்தல்கள் | 2017 ஒக்தோபர் | 2019 சனவரி 31 | 16 | | | |
| (ஈ) | தலன்கம குளத்தின் அகழ்வாராய்ச்சி | 2017 மார்ச் | 2020 செப்தெம்பர் வரையிலும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | 42 | | | |
| (உ) | சென் செபஸ்ரியன் வடக்கு லொக் கதவுகள் மற்றும் பம்பி நிலையத்தின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் | 2019 யூன் | 2020 செப்தெம்பர் வரையிலும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | 15 | | | |
| (ஊ) | மதிவெல கிழக்கு திசைதிருப்பல் திட்டம் கட்டம் III இற்கான மேம்படுத்தல்கள் | 2018 சனவரி | 2020 செப்தெம்பர் வரையிலும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | 33 | | | |
| (எ) | கொலன்னாவ கால்வாய் திசைதிருப்பல் திட்டம் கட்டம் II | 2019 மார்ச் | 2019 மே 05 | 06 | | | |
| (ஏ) | மேற்கு பெய்ர ஏரியின் வெஸ்ரேன் வங்கியுடன் சேர்ந்த லீனியர் பூங்காவின் நிர்மாணம் | 2019 ஏப்ரல் | 2020 செப்தெம்பர் வரையிலும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | 17 | | | |

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | பெய்ரவுடன் சேர்ந்த லீனியர் பூங்காவின் நிர்மாணம் கட்டம் II செயற்திட்டத்தின் பிரகாரம் மண் அகழ்விற்காக ரூபா 1,542,790 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா | உள்ளூர் அதிகாரசபையின் பிரமாணங்களுடன் இணங்காதமைக்கு செயற்திட்டம் பொறுப்பாக | அகழப்பட்ட மண் வேறொரு செயற்திட்டத்திற்கு போக்குவரத்துச் | செயற்திட்டம் மற்றும் ஒப்பந்ததாரர் ஒப்பந்த நிபந்தனையின் தேவைப்பாடுகளுடன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 1,246,686 தொகை அகழ்விற்காக செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்த நிபந்தனையின் பிரகாரம் உள்ளூர் அதிகாரசபையின் பிரமாணங்களிற்கு இணங்க அகழப்பட்ட மண்ணை ஒப்பந்ததாரர் அகற்ற வேண்டிய போதிலும் ஒப்பந்ததாரர் அவ்வாறு செய்திருக்கவில்லை. | உள்ளது. இது சுற்றாடல் மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒப்பந்த வேலைகளிற்கு தாக்கமளிக்கும். | செய்யப்பட்டுள்ளது. | இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | தலன்கம குளத்திற்கு அருகிலுள்ள வெள்ள கதவு நிர்மாணத்தின் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2020 சனவரி 20 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. பின்னர் 2020 ஏப்ரல் 21 அளவில் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு மேலும் காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. எனினும் ரூபா 6,465,070 பெறுமதியில் கதவுகளின் இயந்திரவியல் மற்றும் மின்மயமாக்கல் தொடர்பான சில 3 பிரதான வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் வேலைகளிற்கான தாமதக் கட்டணங்கள் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டக் காலப்பகுதி மேலும் நீடிக்கப்பட வேண்டியிருந்தது. ஒப்பந்தத்தின் பிரதான விடயங்கள் பூர்த்தி செய்யப்பட மாட்டாது. | ஒப்பந்த காலப்பகுதி 2020 யூலை 29 வரை மேலும் நீடிக்கப்பட்டிருந்ததால் தாமதக் கட்டணங்கள் அறவீடு செய்யப்பட முடியாதிருந்தன. திருத்திய அபிவிருத்தி திட்டம் உருவாக்கியவரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக சீர்செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்டத்தின் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 27 உப செயற்திட்டங்களின் நிதி செயன்மன்னெற்றம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 100 சதவீதமாக காணப்பட்ட போதிலும் கூறு 02 இன் 17 உப செயற்திட்டங்கள் மற்றும் கூறு 01 இன் 10 உப செயற்திட்டங்களின் வழங்கப்பட்ட ஒப்பந்த விலைகளிற்கும் உள்ளபடியான ஒப்பந்த விலைகளிற்கும் இடையே விலை வேறுபாடுகள் 16 சதவீதம் தொடக்கம் 40 சதவீதம் வரையான வீச்சினுள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | செயற்திட்ட நடவடிக்கைகளின் கிரயம் அதிகரிக்கின்றதுடன் ஒப்பந்த முகாமைத்துவ நடைமுறைகளிற்கு தாக்கமளிக்கும். | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 100% நிதி செயன்முன்னேற்றத்தை காட்டுகின்ற அனைத்து உப செயற்திட்டங்களும் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.<br><br>ஆரம்ப ஒப்பந்த விலைக்கு எதிராக அமுல்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்ட வேலை பெறுமதியை | ஒப்பந்த உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டக் கிரயங்களை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கருத்தில் கொண்டு அமுல்ப்படுத்தல் கட்டங்களின் போது செயற்திட்ட செயன்முன்னேற்ற சதவீதம் கணிப்பீடு செய்யப்படுகின்றதுடன் பூர்த்தியாக்கல் கட்டத்தில் இறுதி ஒப்பந்த விலைகளிற்கு எதிராக இது கணிப்பீடு செய்யப்படுகின்றது என்பது குறித்துக் கொள்ளப்பட வேண்டியுள்ளது. | |
| (ஈ) | ரூபா 7,601 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்திலான 5 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு பட்டியலிடப்பட்டதுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் இறுதியில் 50 சதவீத செயன்முன்னேற்றத்தை விட குறைவாக பதிவுசெய்யப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடைந்துகொள்ளப்பட முடியாதிருந்ததுடன் செயற்திட்டக் காலப்பகுதி நீடிப்புச் செய்யப்பட வேண்யிருக்கலாம். | பொதுவாக 2019.04.21 இல் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல் (உயிர்த்த ஞாயிறு தாக்குதல்) அனைத்து நிர்மாணங்களினதும் செயன்முன்னேற்றத்தை கடுமையாக பாதித்திருந்தது. | பொதுமக்களிற்கு ஆகக்கூடிய நன்மைகளை வழங்கும் பொருட்டு உப செயற்திட்டத்தின் முன்னுரிமை பட்டியல்களை மேற்கொண்டு வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | கோட்டை றம்பாட் ஈரநில பூங்காவின் நிர்மாணத்தின் 139(9) ஆம் இலக்க பீஓகியூ விடயத்தின் பிரகாரம் நிர்மாண வேலைக்காக வதிவிட அளவையாளரை ஒப்பந்ததாரர் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டியதுடன் மேற்படி பதவிநிலைக்காக ஒப்பந்ததாரர் ரூபா 4,650,000 | ஒப்பந்ததாரரால் கோரப்பட்டிருந்த தேவையற்ற விடயங்கள் காரணமாக நிர்மாணக் கிரயம் அதிகரித்தல். | அப் பதவியை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | தேவைப்பாடுகளை மதிப்பீடு செய்வதன் ஊடாக இவ் வகையான தேவையற்ற வேலைகளை |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொகையை கோரியிருந்தார். எனினும் வதிவிட அளவையாளர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | | | தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 கள விஜயங்களின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்**

| | கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | தலன்கம குளத்தில் பல மரங்களை வெட்டியதன் காரணமாக ஏற்பட்டிருந்த சுற்றாடல் தாக்கங்களை குறைக்கும் பொருட்டு செயற்திட்டம் 42 மரக்கன்றுகளை நடுவதற்கு தீர்மானித்திருந்தது. எனினும் திட்டத்தின் பிரகாரம் ஒப்பந்ததாரர் மரக்கன்றுகளை நட்டிருக்கவில்லை. | அவ்வகை சீரமைப்பு நடவடிக்கைகளை எடுக்கத் தவறியதன் காரணமாக சுற்றாடல் தாக்கங்கள் எதிர்பார்க்கப்பட முடியாதிருந்தது. | கொவிட் - 19 காலப்பகுதியின் போது இவை முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மரக்கன்றுகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் தொடரப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டம் 2017 ஆம் ஆண்டில் கொழும்பு மாநகர சபை ஊடாக ரூபா 275.8 மில்லியன் தொகையை செலவிட்டு crow Island இல் கடற்கரைப் பூங்கா ஒன்றை நிர்மாணித்திருந்தது. எனினும் நிர்மாணங்களின் பின்னர் 3 ஆண்டுகள் கடப்பதற்கு முன்னர் மாசுபடுதல்களை திட்டமிடுதல் மற்றும் நிர்மாணத் தவறுகள் காரணமாக பூங்கா நிர்மாண நோக்கங்களை பொதுமக்களால் அடைந்துகொள்ள முடியாதிருந்தது. ஆகையால் ரூபா 39 மில்லியன் மேலதிக தொகை பூங்காவை புதுப்பிப்பதற்கு செலவிடப்பட வேண்டியிருந்தது. | சுற்றாடல் நிலைமைகள் மற்றும் பயன்படுத்தும் விலைவிகிதங்களை கருத்தில் கொள்ளாமல் கட்டிடக்கலை வடிவமைப்பு தயாரிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக குறுகிய காலப்பகுதியினுள் குறிப்பிடத்தக்களவு மேலதிக கிரயத்தை மேற்கொண்டு புதுப்பித்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. | பொதுமக்களின் பயன்பாடு மற்றும் கண்டிப்பான சுற்றாடல் காரணமாக பொதுமக்களிற்காக திறந்து 4 ஆண்டுகளின் பின்னர் அவதானிக்கப்பட்ட பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. | சமூக தேவைகள் மற்றும் சுற்றாடல் நிலைமைகளை கருத்தில் கொண்டு கட்டிடக்கலை வடிவமைப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும். |

## 3.5 செயற்திட்ட நோக்கங்களிற்கு அப்பால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | உண்மையான தேவைப்பாடொன்று இல்லாமல் செயற்திட்ட இறுதி கட்டத்தில் செயற்திட்டத்தால் மாதாந்த வாடகையாக ரூபா 130,534 தொகை செலவிடப்பட்டு தனியான அலுவலக இடவசதி வாடகைக்கு பெறப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 2,642,073 தொகை அலுவலக பாகப்பிரிவினை வேலைகளிற்காக செலவிடப்பட்டிருந்தது. | செயற்திறனற்றதும் சிக்கனமற்றதுமான செலவினம் அதிகரித்தல். | இடவசதி போதாமையை கருத்தில் கொண்டு உப அலகொன்று பெறப்பட்டிருந்தது. | செயற்திட்ட நிதிகள் சிக்கனமான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டில் கணனி மென்பொருள் முறைமையை ஒருங்கிணைக்கும் செயற்திட்ட பெறுகைக்காக ரூபா 1,000,573 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2020 யூன் வரை செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்கு கணனி மென்பொருள் வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக அம் மென்பொருளை பயன்படுத்துவதற்கு செயற்திட்டம் தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டம் இறுதிக் கட்டத்தில் உள்ளதால் மென்பொருள் பொதியை பயன்படுத்துவதிலிருந்து பெறப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் அடைந்து கொள்ளப்பட முடியாதிருந்தன. | முன்னர் விளக்கமளித்தவாறு மென்பொருள் அபிவிருத்தி செயன்முறை பல்வேறு காரணங்களிற்காக தொடரப்பட்டிருக்கவில்லை. | இவ் வகையான செலவினங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம் ரூபா 390 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 2.6 மில்லியன் தொகை உண்மையான நேர வெள்ளக் கட்டுப்பாட்டு அலகை (real time flood control unit) ஸ்தாபிப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ் ஒதுக்கீட்டில் ரூபா 150.52 மில்லியன் மற்றும் ரூபா 80.76 மில்லியன் தொகை முறையே உபகரணம் மற்றும் கணனி மென்பொருள் கொள்வனவு மற்றும் அலகின் பராமரிப்பிற்காக செலவிடப்பட்டிருந்தன. எனினும் | குறித்த வேலைகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட செயன்முன்னேற்றம் அடைந்து கொள்ளப்பட்டிருக்காததுடன் செயற்திறனற்ற செலவினம் அதிகரித்தல். | உப செயற்திட்டத்திலிருந்து குறிப்பிடத்தக்களவு செயன்முன்னேற்றம் அடைந்து கொள்ளப்படுகின்றது. | கிரய செயற்திறனை அடைந்துகொள்ளும் பொருட்டு செயற்திட்ட நடவடிக்கைகளை திட்டமிடும் போது மாற்று வளங்கள் மதிப்பிடப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்டவாறு குறித்த வேலைகளிலிருந்து குறிப்பிடத்தக்களவு செயன்முன்னேற்றம் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஈ) | ஆட்சேர்ப்பிற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாமல் மூன்று ஆண்டு காலப்பகுதிக்கு மேற்படி உப செயற்திட்டத்தின் மதியுரையாளர் ஒருவரிற்கு ரூபா 37.16 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. மழை பொழிதல் தொடர்பான சரியான தரவுப் பகுப்பாய்வு கிடைக்கக்கூடிய தன்மையை கருத்தில் கொள்ளாமல் உத்தியோகத்தரின் பிரதான மதியுரை பகுதி தீவிலுள்ள பல இடங்களில் மழை பொழிதல் தொடர்பாக பகுப்பாய்வை மேற்கொள்வதாகும். எனினும் வெள்ளக் கட்டுப்பாட்டு முறைமைகள் தொடர்பாக அப் பிரிவால் பங்களிப்பு எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறித்த வேலைகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட செயன்முன்னேற்றம் அடைந்து கொள்ளப்பட்டிருக்காததுடன் செயற்திறனற்ற செலவினம் அதிகரித்தல். | உண்மையான நேர வெள்ளக் கட்டுப்பாட்டை ஸ்தாபிப்பதற்கான தனியான மதியுரை சேவையொன்றாக இப் பெறுகை காணப்பட்டதுடன் உலக வங்கி (டபிள்யூபீ) பெறுகைத் திட்டத்தின் ஊடாக நியம பெறுகை நடைமுறைகளை பின்பற்றிய பின்னர் சேவை பெறப்பட்டிருந்தது. மதியுரையாளருடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் மதியுரைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. ஆகையால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பிரயோகிக்கப்பட்டிருக்கவில்லை. | கிரய செயற்திறனை அடைந்துகொள்ளும் பொருட்டு செயற்திட்ட நடவடிக்கைகளை திட்டமிடும் போது மாற்று வளங்கள் மதிப்பிடப்பட வேண்டும். |